REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 8உ வியாழன் (24—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 9உ வெள்ளி (25—10—57) [இதழ் 113

மாநில நிர்வாகங்களையும் அகில இந்திய மயமாக்க சதியா?

சுமார் 120 அதிகாரிகள் அடங்கிய பொது நிர்வாக அமைப்பு ஒன்றை டெல்லி சர்க்கார் உருவாக்கியிருக்கிறதாம்!

சிக்கலான நிர்வாகத்தில் தனிப்பயிற்சியும் அனுபவமும் பெற்ற அதிகாரிகள் இந்த அமைப்பில் இருப்பார்களாம்!

இவர்கள் இந்தியா முழுமையிலுமாக பொது நிர்வாகத்திற்கு தேவை ஏற்படும்போது அங்கு அனுப்பப்படுவார்களாம்!

'ஐ. ஏ. எஸ்.' பட்டம் பெற்ற அதிகாரிகள் இதில் இடம் பெறுவர் என்றும், இந்த மாதிரி இரு அமைப்பை உருவாக்கு வதில் மாநிலங்களின் சம்மதமும் பெறப்பட்டது என்றும் கூறப் படுகிறது.

'இரண்டில் ஒன்று காண முயலாவிடின் எதிர்காலச் சந்ததி நம்மைத் தூற்றும்'

'இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடவும் தயாராக வேண்டும்'

'காமன்வெல்த் தொடர்பில் இல்லாத அவமானம் ஆங்கிலத்தை வைத்துக் கோள்வதில் உண்டா?'

'இன்றைக்கு வேண்டாம்---இந்தியைப் பிறிதோர் நாள் ஏற்போம் என்பதும் தவறு'

ஆச்சாரியார் அறைகூவல்

சென்னை, அக். 24—

"வெள்ளையர்கள் வெளியேற வேண்டும் என நாம் விரும்பிய போது, ஏகாதிபத்தியமும் ஒழியவேண்டும் என்றுதான் ஆசைப்பட் டோம்; ஆனால்...! இந்தியா முழுமைக்குமாக இந்தி ஆட்சி மொழி யாக்கப்படுவது, இந்தியாவின் ஒரு பகுதி இதர பகுதிகளை ஆளுவ தற்கு வழிகோலும்; அது ஜனநாயகத்தை மறுப்பதற்கு, ஒரு ஏகாதி பத்தியத்திற்குச் சமமானதாகும்.

"இந்தியைத் திணிப்பது என்பது, வேறு உருக்கொண்ட ஏகாதி பத்திய ஆட்சி என்பதைத் தவிர வேறு இல்லை.

"நான் இந்த இந்திப் பிரச்சினை குறித்து பல கூட்டங்கள் நடத்துவதற்குக் காரணம், இந்தி, மத்திய சர்க்காரின் ஆட்சி மொழியா வதை நாம் எதிர்த்துத் தீரவேண்டிய அளவு முக்கியமான விஷய மாகும்.

"ஏதாவது கருத்து வேறுபாடு என்றால், எதையாவது செய்யட் டும்; அது சரியா தவறு என்பதைப் பின்னர் உணரட்டும் என டெல்லி சர்க்காரையே முடிவு எடுத்துக்கொள்ள அனுமதித்துவிடலாம்.

"ஆனால், இந்த விவகாரம், நமது (தென்னாட்டு) மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கக்கூடியதாகும். அதனால்தான், மக்கள் இந்தப் பிரச்சினையைப் புரிந்துகொள்ள மட்டுமின்றி, இந்தித் திணிப்பை எதிர்க்கவும் தயாரிக்கப்படவேண்டும் என்பதை எனது கடமையாகக் கருதுகிறேன்.

"நீங்கள் பிரச்சினையைப் புரிந்துகொண்டால் மட்டும் போதாது; இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தவும் தயாராக இருக்கவேண்டும்.

"பல கோணங்களிலிருந்தும் பிரச்சினையைப் பார்த்துவிட்டு சாஸ்திர ரீதியான முடிவுகளுக்கு வந்தால் மட்டும் போதாது.

"கோழிச் சண்டையையோ, கால் பந்தாட்டப் போட்டியையோ பார்த்துக்கொண்டிருப்பவர்கள் வேண்டுமானால் அப்படி இருக்கலாம்; ஆனால், இது ஒரு விளையாட்டுப் பந்தயம் அல்ல; நாம்தான், கால் பந்துபோல உதைத்துத் தள்ளப்படுகிற மக்களாயிருக்கிறோம்; எனவே, இது ஒரு முக்கியமான—ஜீவாதாரமான விவகாரமாகும்; இதில் நாம் காலம் தாழ்த்தாமல் அக்கறை காட்டியாகவேண்டும்"

—என்று திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், நேற்று சென்னை மயிலை கலாச்சாரக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தமிழ்நாட்டவருக்கு அன்பழைப்புத் தந்திருக்கிறார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங் கிய டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் தான், இந்தி விஷயத் தில் நூற்றுக்கு நூறு ஆச்சாரி யாரின் கருத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

காமன்வெல்த் தொடர்பில் இல்லாத அவமானமா?

தொடர்ந்து சி. ஆர். அவர்கள் பேசியதாவது:—

"வெள்ளையர் வெளியேறியான பிறகும், ஆங்கிலத்தை வைத் துக் கொள்வது இந்தியாவின் கௌரவத்திற்கு இழுக்கல்லவா என்று சிலர் கேட்கிறார்கள்; அவர்களுக்குச் சொல்லு கிறேன் — நீங்கள் காமன் வெல்த் தொடர்பை வைத்துக் கொள்ளுகிறவரைக்குமாவது ஆங்கிலம் இருக்கட்டுமே!

"தங்கள் கௌரவத்தை மறந்து காமன்வெல்த் உறவு கொள்ளு வதற்கு தங்களை 'பவ்வியப் படுத்தி'க் கொண்டுள்ளவர்கள், ஆங்கிலத்தை ஏன் வைத்துக் கொள்ளக்கூடாது?

"காமன்வெல்த்தில் உள்ள நாடு கள் பலவற்றின் கொள்கைகள் இந்தியாவின் கொள்கை களுக்கு விரோதமானவை; அது மட்டுமல்ல — ஐ. நா.,

(4-ம் பக்கம் பார்க்க)

இரயில்வேயில் இந்தித் திணிப்பு!

கட்டாயப் பயிற்சி தர முடிவு

புதுடில்லி, அக். 23—

புகைவண்டி நிலைய தொலை வறி (தந்தி) அலுவலகங்களில் பணியாற்றும் சமிக்ஞையாளர் (சிக்னலர்)களுக்கு இந்தியில் அறி விப்புகள் அனுப்புவதற்குக் கட் டாயப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டுள்ளதாம்!

இந்தியில் தொலைவறிகள் அனுப்பவேண்டிய அளவு அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்துவிட்ட தாம்! இந்த வேடிக்கையான செய்தியை அரசாங்கம் அறிக்கை யாக வெளியிட்டுள்ளது.

இந்தியில் தொலைவறிச் செய்தி அனுப்பப் பயிற்சி பெறும் திட்டம் தன்தொடர்ந்து விரைவில் தீவிரப் படுத்தப்படுமாம்!

இந்தியில் தொலைவறி அனு பவம் பெறுபவர்களுக்கு ஊதியத் துடன் ரூ. 50 கௌரவ ஊதிய மாகத் தரப்படுமாம்!

கல்லூரிகள் இயங்கும் நாட்கள் அதிகரிக்கும்!

கல்லூரிகள் கல்வி ஆண்டில் அதிக நாட்கள் இயங்கவேண்டும் என்பது பற்றி முடிவு செய்ய சென்னை பல்கலைக் கழக 'சிண்டி கேட்' ஆராய்ந்து வருகிறது.

இந்தியில் 'டெலிபிரிண்டர்'

புதுடில்லி, அக். 24—

இந்தியிலும், ஆங்கிலத்திலும் தொலைவறி (தந்திச் செய்திகள்) பெற்று, எழுத்து வடிவில் பொறித்துக்கொள்ளும் இயந்திரம் (டெலிபிரிண்டர்) ஒன்றை ஜப்பா னிய நிறுவனம் வெற்றிகரமாகத் தயாரித்துள்ளதாம்; இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர் இந்த முயற்சியைப் பாராட்டியுள் ளாராம்!

ஒரிசாவைத் தொடர்ந்து ஆந்திரத்திலும்....!

மதுவிலக்குத் திட்டத்திற்கு புதை குழி?

'மக்கள் ஆதரிக்கவில்லை' என்கிறார் மந்திரி!

குண்டூர், அக். 23—

ஒரிசாவைத் தொடர்ந்து ஆந்திரத்தில் மதுவிலக்குத் திட்டத் திற்கு 'விடுதலை' கிடைக்கவிருக்கிறது.

'மக்கள் தொடர்ந்து மதுவிலக்குத் திட்டத்திற்கு ஆதரவு தராமலிருப்பார்களேயானால் திட்டத்தைக் கைவிடுவதற்கான அனுமதி தருமாறு, மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்கும்' என்று மந்திரி கே. வி. ரங்கா ராவ், பத்திரிகையாளரிடம் தெரிவித் திருக்கிறார்.

ஐந்தாண்டுக்கால தவணை தருவார்களாம் மக்களுக்கு; அதன் பின்னும் மக்கள் ஆதரவு தரவில்லையானால், திட்டத்தைக் கைவிட்டுவிடுவார்களாம்!—மந்திரிதான் கூறியிருக்கிறார்!

"மக்கள் எதிர்க்கும்போது மது விலக்கை நீடித்துக்கொண் டிருப்பதில் பயன் என்ன; கைவிட்டுவிடுவதுதானே?" என்று ஒரு நிருபர் கேட்டபோது தான், மந்திரி மேற்கண்டவாறு பதில் தந்திருக்கிறார்.

"இப்போது தெலிங்கானா பகுதியில் மதுவிலக்கு அமு லில் இல்லை; அங்கு மது விலக்கை அமுல் செய்வதால் கிடைத்துவரும் ஆறு கோடி ரூபாய் வருமானம் நஷ்ட மாவதுடன், திட்டத்தை அமுல் செய்வதற்காக வேறு பணம் தேவைப்படும்"

என்றும் அமைச்சர் கூறியிருக் கிறார்.

போலீசார், கணக்கற்ற குற்ற வாளிகளைக் கண்டுபிடிக்கிறார் களென்றாலும், கள்ளச்சாராயம் காய்ச்சுவது, தெலிங்கானாவிலும், ஆந்திராவிலும் வளர்ந்து கொண்டேயிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சென்னை சட்டசபைக் கூட்டத்தில்.....!

சென்னை, அக். 24—

சென்னை சட்டசபை 25-10-57 காலை 10 மணிக்குக் கூடுகிறது; அடுத்தத் திங்கள் 15-ந் தேதி வரை கூட்டம் தொடர்ந்து நடை பெறும் என்று தெரியவருகிறது.

போலீஸ் அதிகாரி பற்றி திரு. இராமசாமி தந்துள்ள அறிக்கை யும் சட்டசபையில் விவாதிக்கப் படுமாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற கலவரங்கள் பற்றி போலீஸ் அமைச்சர் அறிக்கை ஒன்று வெளியிடுவார் என்று தெரியவருகிறது.

புதுக் கல்வித் திட்டம் பற்றி யும், மாவட்ட ஆட்சி மன்ற சீர் திருத்தம் பற்றியும் விவாதம் நடைபெறக் கூடும் என்று தெரிய வருகிறது.

'உதவியே ஆகவேண்டும்; இன்றேல் எங்கள் ஆட்சிக்கு ஆபத்து'

மே. ஜெர்மனியின் காலைப்பிடிக்கிறார் டி.டி.கே.

"நீங்கள் உதவியே ஆக வேண்டும்; இன்றேல், நாங்கள் எதிர் நோக்கியுள்ள ஆபத்திலிருந்து தப்ப முடியாது" என ஓலமிட்டிருக் கிறார், நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மேற்கு ஜெர்மனி தலைநகரான பான் நகரில்!

அவர் கெஞ்சிப் பார்க்கிறார்— உருட்டி மிரட்டிப் பார்க்கிறார், அங்கு!

"நாங்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறபடி, அமெ ரிக்காவிடமிருந்தும் மேற்கு ஜெர்மனியிடமிருந்தும் நிதி உதவி கிடைக்காவிட்டால், மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விளைவுகளிலிருந்து நாங்கள் தப்ப முடியாது"

என்று அவர், மே. ஜெர்மன் பத்தி ரிகை ஒன்றுக்குப் பேட்டியளிக் கையில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

"விலைவாசிகள் சற்று ஏறுவதைத் தடுக்க முடியாமலிருப்பதால், அரசியல் விளைவுகள் தவிர்க்க முடியாதவையாகின்றன. எங்கள் மக்களின் வாழ்க்கைத்தரம் மிகக் குறைவானது என்பதால் சிறு அளவு விலையேற்றம்கூடக் குறிப் பிடத் தகுந்த விளைவுகளை உண் டாக்கிவிடுகின்றன. இதைத் தான் எதிர்க்கட்சிகள் எதிர்பார்த் துக்கிடக்கின்றன"

என்றும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் கூறினாராம்!

மேற்கு ஜெர்மனியிடமிருந்து ரொக்கம், மற்றும் இயந்திர சாத னங்கள் முதலியனவற்றை நீண்ட கால அடிப்படையில் கடனாக எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறி யிருக்கிறார்.

நம் நாடு
சென்னை 24—10—57 வியாழன்

ஒரு சொல் கேளீர்

இந்தியைஇந்தியாவின் ஆட்சி மொழி ஆக்கும் பிரச்சினையையும், பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கும் பிரச்சினையையும் ஒன்றாக்கிக் குழப்பிக்கொள்ளக் கூடாது என்று வாதிடுவதன் மூலம் இந்தி ஏகாதிபத்தியவாதிகளுடன் தங்களுக்குள்ள நெருக்கமான தொடர்பை மறைத்துக் கொள்ள நினைப்பவர்களில் சிலர் தமிழ்நாட்டில் பத்திராதிபர்களாயிருக்கின்றனர்.

'பிரதேச மொழிக்கே பிரதானம்' என்ற உயர்ந்த கோஷத்தின் மூலம் மக்களிடையே தோன்றி வளர்ந்து வலுப் பெற்றுவரும் இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சியை மட்டுப்படுத்தி, ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சேவகம் புரிந்து நற்பெயரெடுக்க விரும்பும் அகில இந்தியக் கட்சி ஒன்றுக்குத் தமிழ்நாட்டில் கொடி பிடிப்போர் சிலர் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்தியை ஆட்சி மொழியாக்குவது, இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குவது என்ற இரண்டும் வெவ்வேறான பிரச்சினைகள் என்று வாதிடுகிறவர்கள் இந்தியை ஆட்சிமொழியாக்குவதில் அவசரம் காட்டக் கூடாது என்று டெல்லி சர்க்காருக்கும், இந்தி கட்டாயப் பாடமாக்கப்படுவதை எதிர்க்கக் கூடாது என்று தமிழ்மக்களுக்கும் அறிவுரை கூறுகிறார்கள்.

ஆனால், இந்த இரண்டும் வெவ்வேறான பிரச்சினைகளா?

'இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குக' என்ற டெல்லியின் கட்டளை எதன் அடிப்படையில் பிறந்தது?

இந்திதான் இந்தியாவின் ஒரே தேசிய மொழியாக்கப்பட வேண்டும் என்ற தங்களின் ஏகாதிபத்தியப் பேராசையால் தான் இந்தியைத் திணிக்கின்றனர் வடவர் என்பது தெளிவு. இடுக்கித் தாக்குதலுக்குள் அகப்படும்போது, இந்தி வெறும் ஆட்சி மொழிதான் என்று குழப்புகின்றனர், அவர்களில் ஆகப் பெரியவர்கள்.

எப்படியோ இந்திதான் இந்தியாவை ஆளவேண்டும் என்ற தங்களின் முடிவு மாற்றப்படுவதற்கில்லை என்ற உன்மத்தத்தின் அடிப்படையில் பிறந்ததுதானே, இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குக என்ற டெல்லியின் கட்டளை?

நிர்ணயித்துள்ள தேதியில், எத்தனை பெரிய நியாயமான எதிர்ப்புக் காட்டப்பட்டாலும், ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை இருத்தியே தீருவோம் என்ற டெல்லியின் நெஞ்சழுத்தம், அந்தக் கட்டளையில் பளிச்சிடவில்லையா?

இந்தியை ஆட்சிமொழியாக்குவதில் டெல்லி அவசரம் காட்டக்கூடாது என்று உபதேசம் இருதயசுத்தியானது என்றால், கட்டாயமாக்கப் படாத நிலையில் தமிழ் மக்கள் அதனை விரும்பிப் படித்துக் கொள்ளுகிற சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்பது தானே முரண்படாத அறிவுரையாக இருக்கமுடியும்?

மேலும், இன்று இந்தித் திணிப்பை எதிர்ப்போரில் ஆச்சாரியார் உட்பட்ட மிகப் பெரும்பாலானோரின் கருத்து, 'என்றைக்குமே இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப்படக் கூடாது' என்பதுதானே தவிர, 'சில பல ஆண்டுகள் கழித்து வேண்டுமானால் இந்தி ஆட்சி மொழியாகலாம்' என்பதல்ல.

என்றைக்குமே இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகக் கூடாது என்று தெரிவித்தான பிறகு, இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கவேண்டும் என்பதை எவ்விதம் நியாயப்படுத்த முடியும்?

இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படுவதை ஏகாதிபத்தியப் போக்கு எனக் கண்டிப்போரின் எதிர்ப்பில், இந்தி கட்டாயப் பாடமாகத் திணிக்கப்படுவதை எதிர்ப்பதும் அடங்கியிருக்கிறது என்பதில் சந்தேகம் என்ன? இந்தி என்றைக்குமே இந்தியாவின் ஆட்சிமொழியாக்கப்படக் கூடாது என்று கருதுவோர் எங்காவது மோதிக்கொள்ளாமல் நேர்வழி நடக்க விரும்பினால், இந்தி பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கப்படுவதையும் எதிர்க்கக் கடமையுடையவர்களாகின்றனர்.

அடுத்து, பிரதேசமொழிக்கே பிரதானம் என்ற கோஷத்தைப் பார்க்கலாம்.

இதன்படி, தொழில் நுட்பம், விஞ்ஞானம், மருத்துவம் முதலிய சகலதுறைக் கல்வியும், பல்கலைக்கழகப் படிப்பு மட்டம் வரை, பிரதேச மொழி—அதாவது, தாய் மொழியில் தான் இருக்கவேண்டும்; ஆனால் ஆட்சிமொழியாக மட்டும இந்தி இருக்கும் என்கிறார்கள்.

நெடிய எதிர்காலத்தில், அதாவது ஆங்கிலத்தின் அவசியம் மறைந்து போய்விடுகிற காலத்தில், இந்தத் திட்டத்தின் விளைவு என்னவாயிருக்கும்?

தமிழ்நாட்டு மாணவர் ஒருவர், தமிழ் மொழியில் மின்சார எஞ்சினியர் பட்டம் பெற்றிருப்பதாக வைத்துக் கொண்டால், இவர், வங்கத்தில் போய் அங்குள்ள வங்காள மொழியில் எஞ்சினியரிங் படித்தவருடன் சேர்ந்து பணியாற்றுவது எங்ஙனம்? இவர்கள் இருவரும் தங்களின் தொழில் ஞானத்தை எந்த மொழியில் வெளியிட்டுக் கொள்வார்கள்?

அந்தக் கட்டத்தில், வஞ்சக நெஞ்சம்கொண்ட இந்த 'அகில இந்தியா'க்கள் சொல்லுவர்—'அகில இந்திய' நலன் வசதி கருதி தொழில், மருத்துவம் முதலிய துறைக் கல்வி இந்தியிலேயே போதிக்கப்படும் என்று! 'பிரதேச மொழிக்கே பிரதானம்' என்ற கோஷத்திற்கு அப்பொழுது என்ன மதிப்பு இருக்கும்?

'பிரதேச மொழிக்கே பிரதானம்' என்ற மெருகும் கவர்ச்சியும் பூசப்பட்ட கோஷத்தின் மூலம், இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் திரண்டுவரும் உணர்ச்சியை மட்டுப்படுத்திவிடக் கருதுகிறவர்களின் வஞ்சக வலையில் வேறு எவர் விழுந்தாலும் தமிழ் மக்கள் விழமாட்டார்கள் என்பதை அவர்களுக்குச் சொல்லிவைக்கிறோம்.

உபதேசங்களுக்கும், கவர்ச்சிகரமான கோஷங்களுக்கும், தமிழகம் மதிமயங்கிய காலம ஒன்று இருந்தது; இப்போது செத்துப் போய்விட்டது. அந்த இறந்தகாலம் மறுபிறவி எடுக்காது என்ற ஒரு சொல்லைத் தான் கேளீர் என, விதண்டாவாதக்காரர்களுக்கும் வஞ்சக நெஞ்சினர்க்கும் கூற விழைகிறோம்.

'அரும்பு கருகிவிடுமோ என ஐயப்படத் தேவையில்லை'

'மலரவைத்து மணங்கமழச் செய்யும் ஆற்றல் மக்களுக்குண்டு'

தபால் ஊழியர்களிடையே பொதுச்செயலாளர்

சென்னை, அக். 24—

அனைத்திந்திய தபால்—தந்தி ஊழியர் (3, 4-ம் பிரிவு) சங்க சென்னை ஜி. பி. ஓ. கிளையின் மூன்றாவது ஆண்டு மாநாடு 17—10—57 மாலை 6-மணிக்கு தோழர் டி. எஸ். இராமானுசம் தலைமையில் ஜி. பி. ஓ. கட்டிடத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் அருணாசலம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், பி. எம். கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தபால்-தந்தித்துறை ஊழியர்களாகிய நீங்கள், உங்கள் குறைகளைப்பற்றியும் அக்குறைகளை எவ்வாறு நிறைபாடு செய்துகொள்ளலாம் என்பதை எண்ணி அதற்கான வழிவகை காணவும், எதிர்காலத்தில் எப்படியெப்படி பெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை வகுத்துக் கொள்ளவும் இத்தகைய கூட்டங்களை ஏற்பாடு செய்து, என்போன்றவர்களை அழைத்துப் பேசச் செய்திருக்கிறீர்கள் என்றே கருதுகிறேன்.

"உங்கள் குறைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. உங்களைப் பார்த்தாலே புரிந்துகொள்ள முடியும்.

"பஞ்சடைந்த கண்கள், குழிவிழுந்த கன்னங்கள், ஒட்டிய வயிறு, கவலை தோய்ந்த முகம் இவையே நீங்கள் படுகின்ற துயரை எடுத்துக் காட்டும்.

"வாழ்க்கைச் செலவு ஒருபக்கம் உயர்ந்து கொண்டே போகிறது; மற்றொருபக்கம் வயிற்றுப் பாட்டுக்கே திண்டாடும் நிலை!

"வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் ஆட்சியாளர்கள், ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டும்; அல்லது வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுத்து நிறுத்தவேண்டும். இந்த இரண்டும் முடியாத நிலையே நீடிக்குமானால் எதிர்காலத்தைப்பற்றி ஆட்சியாளர்களுக்கு உணர்த்த—நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் உணர்த்த, இத்தகைய மாநாடுகள் பயன்படுமெனக் கருதுகிறேன்.

"நான் பலமுறை எடுத்துக் காட்டி வருவதுபோல, அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்; கேட்டால்தான் கொடுக்கப்படும்; தட்டினால்தான் திறக்கப்படும்; எனவே, கேளுங்கள் கொடுக்கப் படும்; தட்டுங்கள் திறக்கப்படும்.

"மூன்றாம்தர — நான்காம்தர ஊழியர்கள் தங்கள் வாழ்க்கைக்குக் கட்டுப்படியான ஊதியம் தர வேண்டுமென்றுதான் கேட்கிறார்களேயொழிய, அவர்கள் மாடமாளிகை கட்டிக்கொண்டு பஞ்சணையில் துயில வேண்டுமென்பதற்காக அல்ல; அவர்களுடைய இன்றைய ஏக்கம், வாட்டம், வருத்தமெல்லாம், வாழ்வுக்காகத்தான். பலமுறை கேட்டும் ஆட்சியாளர், 'பார்ப்போம்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஓரளவு வெற்றி கிடைக்கும் சூழ்நிலையையும் காண்கிறோம். இந்த வெற்றியைப் பெற அத்தனைபேரும் ஏகோபித்துக் குரலெழுப்பினால் தான் முடியும். அத்தகைய ஆற்றலைத் திரட்ட, தபால்-தந்தி யூனியனைச் சேர்ந்தவர்கள் முயன்று வருகிறார்கள். தபால்-தந்தி ஊழியர்களின் அண்மைப் போராட்டம்—உங்கள் குறைகளை நாட்டு மக்களை உணரச் செய்தது; ஆட்சியாளரையும் அசைந்து கொடுக்கச் செய்தது என்பது, உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

"தபால்-தந்தி ஊழியர்களாகிய நீங்கள் உங்களுக்கு மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும்படியான வசதியைப் பெற்றிருக்கிறீர்கள். அண்மையில் உங்கள் முயற்சியால் ஓரளவு பலன் அரும்பியுள்ளது.

"அந்த அரும்பு மலருமோ, கருகிவிடுமோ என்று ஐயப்பட வேண்டியதில்லை; மலர்ந்தே தீரும்; மலராவிட்டாலும், ஆட்சியாளர் அதை மலரச் செய்யும்படி மக்கள் செய்வார்கள்; மணத்தைக் கமழவைப்பார்கள் என்று நம்பலாம். அந்த அளவுக்கு ஊக்கத்தையும் உணர்ச்சியையும், நீதி-நேர்மை-நாணயத்தையும் ஆட்சியாளருக்கும் மக்களுக்கும எடுத்துத் தெரியப்படுத்தவே இத்தகைய மாநாடுகள் பயன்படவேண்டும்.

"வாழ்க்கையையே, போராடிப் போராடித்தான் பெற வேண்டியுள்ளது. நீங்களும் போராடித்தான் உங்கள் தேவைகளைப் பெறவேண்டியிருப்பதால், உங்கள் ஆற்றல்களையெல்லாம் ஒன்று திரட்டி, மக்களின் இதய நாடிகளைத் தடவுமளவுக்குப் போராடுங்கள்! உரிமை பெறுங்கள்! நாட்டுக்கு உழைக்கும் உங்கள் உள்ளங்களெல்லாம் வாழ்க! உங்கள் முயற்சிகளெல்லாம் வளர்க!! உங்கள் தொண்டுகளெல்லாம் வெல்க, வெல்க என வாழ்த்துகிறேன்."

ஆசிரியருக்குக் கடிதம்

இப்போது தேவையில்லை

ஐயா!

1960-க்குள், தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையில் மின்சார இரயில் ஓட வேண்டும் என்றும், அந்தத் திட்டம் மகத்தான வெற்றியளிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் நான் அதை வரவேற்கவுமில்லை—எதிர்க்கவுமில்லை — பயனற்றது என்று கூறவுமில்லை; ஆனால் சில ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கலாம் என்றே கூறுகிறேன்.

இந்தத் திட்டத்திற்குப் பல இலட்சம் ரூபாய் செலவாகும்; இந்தத் தொகையை வேறு பயன் தரும் காரியங்களுக்குப் பயன் படுத்தலாம்.

ஏற்செனவே தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரை இரயில் தொடர்பு உள்ளது.

வேறு பல காரியங்களுக்குப் பணம் தேவைப்படும் இந்த நேரத்தில், மின்சார இரயில்கள் அவசியமில்லை; இதற்கு மாறாக கூடூரிலிருந்து திண்டுக்கல் வரை—தேனி, பெரியகுளம், வத்தலகுண்டு வழியே புதிய இரயில் பாதையை அமைக்கலாம்; இதே பாதையை கரூர்வரையிலும்விரிவு படுத்தவும் செய்யலாம்.

இதுவரை மின்சார ஒளி வசதி பெறாத கிராமங்களுக்கு இந்த மின்சார சக்தியைப் பயன்படுத்தலாம்.

இந்தத் திட்டத்தை உருவாக்கவும், ஆராயவும் அரசாங்கம் அதிகத் தொகை செலவிட்டிருக்கும்; திட்டமும் தயாராகிவிட்டது; அதிகச் செலவிலும் அது உருவாக்கப்பட்டுள்ளது.

முக்கியமான இலக்குகள் முடிந்த பின்னர், நம் நிதி வசதி பெருகியதும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

பொதுமக்களுடைய பணத்தைச் செலவிடும்போது நாம் தீர ஆராய்ந்து செய்ய வேண்டும். நம் முடைய பொருளாதார நிலை சரியில்லை. வெளிநாடுகளின் உதவியை நாம் எதிர்பார்த்திருக்கிறோம். எனவே, ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள், 'ஏழைகளின் பணத்தை நியாயமாகச் செலவிட வேண்டுமே தவிர ஆடம்பரத்திற்குச் செலவிடக்கூடாது' என்பதை உணர வேண்டும்; அறியாமை நம்மை அதிகச் செலவு செய்யும் வழியில் அழைத்துச் செல்லவிடக்கூடாது.

ஆர். நரசிம்மன்,
மதுரை.

இந்திக்கு ஆதிக்கம் கோரி பஞ்சாபில் நடைபெறும் கிளர்ச்சி!

பம்பாய் ஆரிய சபை இலட்ச ரூபாய் நிதி தருகிறது

பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம் கோரி நடைபெறும் வல்லடி வம்புக் கிளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பம்பாய் மாகாண 'ஆரிய பிரதிநிதி சபா', மற்றும், பம்பாய் இந்தி ரட்சக சமிதி இவற்றின் நிர்வாகிகள், 'சர்வதேஷிக் பாஷா ஸ்வதந்திரிய சமித்' என்ற ஸ்தாபனத்தின் தலைவரான ஜி. எஸ். குப்தா என்பாரிடம், கடந்த ஞாயிறன்று ரூ. 1,11,111 கொண்ட பண முடிப்பை வழங்கியுள்ளனராம்!

சென்னைக்குக் கிடைப்பது ரூ. 7,200 மட்டும்தான்!

புதுடில்லி, அக். 23—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் நாட்டின் மருத்துவ முறையை வளர்ச்சியடையச் செய்ய 1957 செப்டம்பர் திங்களில் ரூ. 89,200 மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதில், சென்னைக்கு ரூ. 7,200 மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு ஆந்திர அரசு தாக்கீது

ஐதராபாத், அக். 23—

ஆந்திர மாநில அரசாங்க ஊழியர்கள் சீர்வரிசைகள், வெகுமதிகள், அன்பளிப்புகள் தங்கள் சார்பில் அளிப்பதையும், தங்கள் சார்பில் பெற்றுக் கொள்வதையும், அரசாங்கத்திற்கு அறிவித்து விட்டுச் செய்யவேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மனவளம் பெருத இந்தியப் பேரரசு 'வெந்தபுண்ணில் வேல்' பாய்ச்சுகிறது

அதன் ஆட்சிமுறை இறுதிக் கட்டத்தைத் தழுவிக் கொள்ளும்

இந்தித் திணிப்பைப் பிரச்சினையாக வைத்து மறு தேர்தலுக்கு நிற்கட்டும்

திருப்பத்தூரில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் முழக்கம்

13—10—57 மாலை **6-30** மணிக்கு, திருப்பத்தூர் (வ. ஆ.) தி. மு. கழகச் சார்பில் சந்தை மைதானத்தில் தோழர் இரா. இளம்பிறை தலைமையில் ஒரு மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள், அக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய வெறியை விளக்கி வன்மையாகக் கண்டித்தார். அவர் பேச்சின் விவரம் வருமாறு :—

"இன்று இம்மாபெரும் கூட்டத்தில் கலந்துகொள்ளும்போது, 20 ஆண்டுகளுக்குமுன் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல என் நினைவுக்கு வருகின்றன. நமது பொதுச்செயலாளரின் அறிவிப்புக்கேற்ப இன்று நாடெங்கும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடந்துகொண்டிருக்கின்றன. நம் தாயகத்தில் மட்டுமின்றி பம்பாய், வங்காளம் போன்ற பிறமாநிலங்களிலும், இலங்கை, பர்மா, இரங்கூன், மலேயா போன்ற வெளிநாடுகளிலும்கூட நமது எண்ணம் வெற்றி பெறவேண்டும் என்று இதே நேரத்தில் அங்குள்ள கழகக் கிளைகளும், ஆதரவாளர்களும் தங்களது தார்மீக ஆதரவைத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருப்பார்கள்.

"காங்கிரஸ் ஆட்சிபீடமேறி பத்து ஆண்டுகள் ஆகின்றன. ஏழை—எளிய—நடுத்தர மக்களின் வாழ்வு இந்தப் பத்து ஆண்டுகளில் ஏதாகிலும் வளர்ச்சியடைந்திருக்கிறதாயெனில், அரசியல் துறையில் நேர்மை உள்ளம் படைத்தவர்கள் இல்லையென்றுதான் கூறுவார்கள்.

"தென்னகம் எல்லாத் துறைகளிலும் பின்தள்ளப்பட்டு, ஆதிக்கக்காரர்களால் சீரழிக்கப்பட்டு வந்திருக்கிறது; அரசியல்—பொருளாதாரத் துறைகளில் தென்னாடு ஓரவஞ்சனையுடன் நடத்தப்பட்டு வருவதை நாம் எவ்வளவோ விவரித்திருக்கிறோம். நாமாகிலும் எதிர்க்கட்சியினர்; எனவே, ஆளும் வர்க்கத்தினருக்கு மாறான எண்ணத்தைத்தான் தெரிவிப்போம் என்று பழி சுமத்தலாம்; ஆனால், அரசியலாரால் நியமிக்கப்பட்ட பொருளாதார நிபுணர்களால்கூட தென்னகம் பின் தங்கியிருக்கிறதென்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

"ஆக, இவ்வித முக்கியமான குறைபாடுகளைப் போக்குவதற்கு இந்தியப் பேரரசு மனவளம் பெறாமல், வெந்தபுண்ணில் வேல் கொண்டு குத்துவதுபோல நம் தாயகத்தின் மீது இந்தியைத் திணிக்கத் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

"மெஜாரிடி பலம் தங்களுக்கு இருக்கிறதென்ற ஒரே காரணத்தால், அந்தப் பலம் முறியடிக்கப்படுவதற்கு முன்னதாகவே தனது ஆதிக்கம் என்றும் அசையாதபடி இருக்கவேண்டும் என்ற நப்பாசையால் உந்தப்பட்டு, இந்தியப் பேரரசு ஜனநாயகத் துரோகமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது.

"இந்தி இந்தியாவுக்குப் பொதுமொழியாவதற்குத் தகுதியுடையதல்லவென்றும், அவ்விதம் திணிக்கப்பட்டால் இந்திய ஒற்றுமைக்கே கேடு பயக்கும் என்றும் காங்கிரசில் தொடர்பு கொண்டுள்ள முக்கிய தலைவர்களே எடுத்துக்கூறி வருகின்றனர். அதிலும் குறிப்பாக, ஆச்சாரியார் அவர்கள் கடந்த ஓராண்டுக்காலமாக இந்தித் திணிப்பின் ஆசாபாசங்களைப் பலவகையிலும் சித்தரித்துக்காட்டிக் கண்டித்து வந்திருக்கிறார்.

"மற்றும் அரசியல் கட்சிகள் பலவும், பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும், பேராசிரியர்கள்—பெரும் புலவர்கள் ஆகியோரும், மாணவர் பட்டாளமும் ஆக தென்னகத்திலுள்ள நூற்றுக்கு 90 பேர் வீதமாக இந்தித் திணிப்பை எதிர்த்துவருகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகம் இப்பிரச்சினையில் தீவிர எதிர்ப்பைக் காட்டி எச்சரிக்கை விடுத்திருப்பதை நாடறியும்.

"நமது இளவல் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள், பாராளுமன்றத்தில் தென்னகமக்களின் உள்ளக்கிடக்கையை திட்டவட்டமாக எடுத்துக்காட்டி, 'இந்தியப் பேரரசின் மொழி ஆதிக்கம் நிச்சயம் அழிந்துபடும்' என்றும் எச்சரித்திருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள இந்தி ஆதிக்க எதிர்ப்பு அணியின் கூட்டுச் சக்தியைத் திரட்டிக் காட்டுவது போன்றும் அவரது பாராளுமன்றச் சொற்பொழிவு நேரு சர்க்காருக்கு ஒரு சவாலாகத் தரப்பட்டிருக்கிறது.

"இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் தாய்மொழியையும் ஆங்கிலத்தையும் பயின்றால் தனது தாயகம்—இந்தியத் துணைக்கண்டம், உலக நாடுகள் அனைத்திலும் தொடர்பு கொள்ளலாம்; எனவே இரு மொழிகளைப் பயில்வது என்ற முடிவில் பொதுமொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று கல்வித் துறை நிபுணர்கள்—அனுபவம் பெற்றோர் வேண்டுகோளாகவும், வற்புறுத்தலாகவும் தெரிவித்து வருகின்றனர்.

"வசதியும், வாய்ப்பும், அவசியமும் உடையவர்கள் மேலும் பல மொழிகளைக் கற்றுக்கொள்வதை எவரும் தடுக்கப்போவதில்லை.

"இந்த நேர்மையான திட்டத்தை இந்தியப் பேரரசினர் ஏற்றுக்கொள்ளாமல், 'எவ்விதத்திலும் இந்தியைத் திணித்தே தீருவோம்' என்று முரட்டு வாதம் பேசுகின்றனர். அவ்வாறு திணிப்பதற்கான நடவடிக்கைகளில் சிலவற்றில் வெளிப்படையாகவும், மற்றும் சிலவற்றில் மறைமுகமாகவும் ஈடுபட்டுவருகின்றனர்.

"இந்தி—இந்தியாவுக்குப் பொதுமொழியாதல் வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது; ஆனால், அச்சட்டம் நிறைவேற்றப்பட்டவிதத்தை மனமார உணருபவர்கள் இந்திய அரசியல் சட்டத்தைப் பற்றியே ஐயப்பாடு கொள்ள வேண்டியிருக்கும்; அதாவது, ஜனநாயக முறையை அடிப்படையாகக் கொண்டு அச்சட்டம் நிறைவேறவில்லை.

"இந்தியப் பேரரசுக்கு உண்மையிலேயே ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையிருக்குமானால், இந்தித் திணிப்பைப் பற்றி அந்தந்த மாநில மக்களிடையே வாக்கு எடுத்தோ அல்லது இந்தித் திணிப்பை ஒரு பிரச்சினையாக வைத்தோ மறு தேர்தலுக்கு நின்று பார்க்கட்டும். அப்போது மக்கள் தீர்ப்பை தெரிந்துகொள்ளட்டும்; இதற்கு ஆளும்வர்க்கம் முன்வருமா என்று கேட்கிறோம்.

"இந்தியைத் திணிக்கும் பிரச்சினையை அந்தந்த மாநிலங்களின் தீர்ப்புக்கு விடுத்து, எல்லா மாநிலங்களுக்கும் உத்தியோகபூர்வமான தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் வகையில் உருவாகும் திட்டத்தால்தான் இந்திய மாநிலங்களுக்கிடையே தோழமையை வளரச் செய்ய முடியும்; அதற்கு மாறாக இந்தியைத் திணித்து, அதுதான் பொதுமொழி என்று பிடிவாதம் பிடித்து ஆதிக்கம் செலுத்த முற்பட்டால், 'இந்திய ஒற்றுமை' என்பது பகற்கனவாக முடியும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

"சில மேதாவிகள், இந்தியை முப்பது ஆண்டு பொறுத்துத் திணிக்கலாமா அல்லது இருபது ஆண்டுகளில் கொண்டுவரலாமா என்றெல்லாம் பேரம் பேசுகின்றனர்; இத்தகைய போக்கினர், 'பாலுக்கும் காவல்—பூனைக்கும் தோழன்' என்ற ரகத்தைச் சார்ந்தவர்களேயன்றி வேறில்லை.

"நேரு சர்க்காரையும் திருப்தி செய்து, தன் தாயக மக்களையும் கண் துடைப்பு வித்தையில் ஏமாற்றி, அரசியல் துறையில் வெளிச்சம் போடும் விசித்திரப் பிறவியினர் இவர்கள்!

"இந்நிலையில் இருபது ஆண்டு பொறுத்து பொதுமொழியாகக் கொள்வதா, அல்லது, பதினைந்து ஆண்டுகளிலேயே ஏற்றுக்கொள்வதா என்ற பேரத்திற்கே இனி இடமில்லை. இவ்வித சமரச உபதேசங்களைக் கேட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஏமாந்துவிடாது.

இந்தி தென்னகத்திற்கு—தமிழகத்திற்குப் பொது மொழியாவதை தி. மு. கழகம் கண்டிப்பாக அனுமதிக்காது மீறித் திணித்தால் அந்த ஆணவமான நடவடிக்கைகளுக்கு புள்ளிவைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

"திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டங்களைத் தேடி அலைந்து, எப்படியாகிலும் போராட்டத்தை நடத்தி உயிர் பிழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இல்லை. உங்களுக்கெல்லாம் இந்தச் சமயத்தில் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்றதும் போராட்டம் துவக்க வேண்டும் என்று நாங்கள் அனைவருமே நமது அண்ணா அவர்களிடம் வேண்டினோம்—வற்புறுத்தினோம்—சலித்துக் கொண்டும் கேட்டுப் பார்த்தோம். 'போராட்டங்களைத் தேடி அலைந்து இயங்குவது அரசியல் கட்சியாகாது; அப்படிப்பட்ட கட்சியும் நிலைபெற்று நிற்காது; போராட்டம்நம்மை எதிர்நோக்கி வளராகாத் திருங்கள்' என்று அண்ணா அவர்கள் கண்டிப்பாககூறிவிட்டார்கள்.

"பின்னர்—ஆச்சாரியார் அவர்கள் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார். திராவிட முன்னேற்றக் கழகம் அத்திட்டத்தைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுத்தது; வற்புறுத்தியது; எச்சரிக்கைவிடுத்தது; இவ்வளவையும் ஆச்சாரியார் பொருட்படுத்தவில்லை; வம்புக்கு நின்றார்; இறுதியாக அறப்போரில் இறங்குமாறு அண்ணா உத்தரவிட்டார். தி. மு. கழகம் நடத்திய அறப்போரின் காரணமாக ஆச்சாரியாரும் ஆட்சிபீடத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டார்; அவரது குலக்கல்வித்திட்டமும் மண்ணைக் கவ்விற்று!

"அந்த விவரங்களை, இந்தியைத் திணிக்கத் துடியாய்த் துடிக்கும் இந்தியப் பேரரசினருக்கு அறிவுரையாக வைக்கிறேன். தி. மு. கழகம் என்ன செய்துவிட முடியும்? உலகெங்கும் நமக்குப் புகழ் பாடப்படுகிறதே' என்று இறுமாந்து நேரு சர்க்கார் இந்தியைத் திணிக்குமானால் இந்தி ஆதிக்கம் மண்ணைக் கவ்வுவது மட்டுமல்ல—இந்தியப் பேரரசின் ஆட்சிமுறையும் இறுதிக் கட்டத்தைத் தழுவிக்கொள்ளும் என்பதை நினைவு படுத்துகிறோம். இந்தித் திணிப்பை எதிர்த்து உருவாகிவரும் சக்தி சமான்யமானதன்று!

"1937-ம் ஆண்டில் இந்தியை எதிர்த்தபோது நாம் சிலபேர்தான்; மக்கள் மன்றத்திலுத் போதிய ஆதரவு இல்லை; ஆதலால்தான், அன்று முதலமைச்சராயிருந்து ஆண்டுவந்த ஆச்சாரியார் ஆட்சியின் அடக்குமுறைக்கு நமது மாவீரர்கள நடராசன் — தாளமுத்து ஆகியோர் இரையாகும் அளவுக்குக் கொடுமைகள் நடந்தன; தாய்மார்களும் சின்னஞ்சிறு குழந்தைகளும்கூட சிறையிலடைக்கப்பட்டனர்; அவ்வாறிருந்தும் நாம் வெற்றி பெற்றோம்.

"இன்றோ—அந்த எதிர்ப்புக்கு யார் காரணமாயிருந்தாரோ அந்த ஆச்சாரியார் அவர்களே, 'இந்தியப் பேரரசின் மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்துவேன்' என்று மனமாரக் கூறுகிறார். இதைப்போன்று ஏராளமானவர்கள் மனவளம் பெற்று நமக்கு ஆதரவாக உள்ளனர். 1937-ம் ஆண்டில் நமது இயக்கம்—தமிழர் பெரும்படை ஆற்றிய தூய்மையான தொண்டு, ஆச்சாரியார் போன்றவர்களை விழிப்படையச் செய்து, நமது கொள்கைக்கு உற்ற துணையாகவும் இருக்கச் செய்கிறது.

"அது மட்டுமல்ல; தி. மு. கழகத்திற்குப் பின்னால் மக்களின மகத்தான சக்தி திரண்டு நிற்கிறது. தென்னக மக்கள் 1937—1957-ஆக இருபது ஆண்டுகளுக்கிடையே தங்களின் ஒற்றுமையை வளர்த்துவந்துள்ளனர். அதே சமயத்தில், ஆதிக்கக்காரர்களின் வஞ்சகச் செயல்களையும் நன்கு உணர்ந்திருக்கின்றனர். எனவே, இந்தியைத் திணித்தால் அதனை எதிர்த்து நடத்தப்படும் கிளர்ச்சி கடுமையானதாயிருக்கும் என்பதை ஆட்சிபீடத்திலிருந்து கொக்கரிப்பவர்கள் உணர்ந்து திருந்தவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

"தபால்—தந்தி பாரங்களில், பெயர்ப் பலகைகளில், இரயில்வே அலுவலகங்களில் — இப்படியாக இந்தித் திணிக்கப்படுவது உடனடியாகக் கைவிடப்படவேண்டும். அந்தந்த மாநில மொழிகளிலும், பொதுவாக ஆங்கிலத்திலும் இவைகள் அச்சிட்டு வழங்கப்படவேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் இன்று நாடெங்கிலும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை டெல்லி ஆட்சியாளர், புத்தியில் பதியவைத்துக்கொண்டு, தங்களின் முரட்டு வாதத்திலிருந்து திருந்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"இவ்விதமாகப் பலவழிகளிலும் தரப்படும் நமது வேண்டுகோள் ஏற்கப்படாமல், இந்தி திணிக்கப்பட்டால் — அன்புள்ள தாய்மார்களே! தோழர்களே! மாணவர்களே! பாட்டாளி மக்களே! — அறப்போராட்டத்தில் ஈடுபட ஆயிரக்கணக்கில் அணிவகுத்து நின்று ஆவன செய்வீர்களாக!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேண்டுகோளை அலட்சியப்படுத்தி வலுச்சண்டைக்கு அழைக்கப்படுமானால், கழகம் விடும் அழைப்பை ஏற்று அறப்போரில் ஈடுபடுவதற்கு இப்போதிருந்தே தயாராகுங்கள்!

"எந்த விலை கொடுத்தேனும், நமது கடைசி சொட்டு இரத்தம் இருக்கும்வரையில் மானத்தோடு போராடி, நமது மாவீரர்கள் விட்டுச் சென்ற பணியை முடிப்போம்! பனியா ஆதிக்கத்தையும் எதிர்ப்போம்!

"திராவிடம் எவரையும் அடிமைப்படுத்தாது! எவருக்கும் அடிமைப்படாது! தனி உரிமையுடன் இயங்கும் ஆட்சிமுறையை நம் நாளிலேயே வகுப்போம், வாரீர்! வாரீர்! என்று பணிவன்புடன் அழைக்கிறேன்."

கலைக் கழகத் துவக்கவிழா

அண்ணா தலைமையில் புரட்சி நடிகர் கருத்துரை

காஞ்சீபுரம், அக். 20—

இன்று காலை காஞ்சீபுரம் கண்ணன் தியேட்டரில், காஞ்சி கலைக் கழகத் துவக்க விழா சிறப்புடன் நடைபெற்றது.

விழாக் கூட்டத்திற்கு அண்ணா அவர்கள் தலைமை தாங்கி, விழாவைச் சிறப்பான முறையில் நடத்திக்கொடுத்தார்கள்.

விழாவில் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா, ராஜா பஸ் உரிமையாளர் டபிள்யூ. கே. தேவராஜன், காஞ்சி நகரசபைத் தலைவர் பெருமாள் ஆகியோர் புரவலர்களாக இருக்கும் அந்தக் கழகத்தின் துவக்கவிழாவிற்கு 'நம் நாடு' பொறுப்பாசிரியர் காஞ்சி-கல்யாணசுந்தரம், சி. வி. எம். அண்ணாமலை, அரங்கண்ணல், செழியன், வழக்கறிஞர் வி. பி. இராமன், இராஜாராம், கரூர் மாணிக்கம், ஈ. வி. கே. செல்வம், இராமதுரை, ஈழத்தடிகள், சி. வி. ராஜகோபால், பாபு, பூஞ்சோலை, தசரதன் ஆகியோர் வந்திருந்து சிறப்பித்தனர்.

தோழர் மா. கி. தசரதன் அவர்கள், வந்திருந்த அனைவரையும் வரவேற்று தலைவரை முன்மொழிய, தோழர் பூஞ்சோலை அவர்கள் வழிமொழிந்தார்.

காஞ்சி கலைக் கழகத்தின் சார்பிலும், காஞ்சி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் பேச்சாளர்களுக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

காஞ்சீபுரம் திருக்கச்சிநம்பித் தெருவிலுள்ள 'திராவிட நாடு' அலுவலகத்திற்கு அருகில் கலைக் கழகத்தின் பணிமனை அமைந்திருக்கின்றது.

நாடகக் கலையையும், அது சம்பந்தப்பட்டவைகளையும், பந்தாடுதல் போன்றவைகளையும், சமுதாய வளர்ச்சி பற்றியும் கழகம் கவனித்து ஆவன செய்யும் என்று கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

அன்று பகல் அண்ணா அவர்கள் இல்லத்தில் வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உண்டி அளிக்கப்பட்டது.

மத்திய அந்தமானில் தமிழர் படிப்பகத் திறப்பு

மத்திய அந்தமானின் தலைநகராகிய லாங்ஐலண்டில் தமிழ்த் தோழர்களின் பெரும் முயற்சியால் 'தமிழர் படிப்பகம்' திறக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா 2-10-57ல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கேரள மாநிலத்தில் கழகக் கூட்டம்

துணைப் பொதுச்செயலாளர்
என். வி நடராசன்
கலந்துகொள்கிறார்

27—10—57 காலை 11 மணியளவில் தேவிகுளம் வட்டம் மூணாரில், தேவிகுளம் வட்ட தி. மு. க. செயலாளர் தோழர் சாண் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்; கேரள மாநில தி. மு. க. செயலாளர் தோழர் கே. எச். எம். சுபேர் கொடியேற்றுவார்; தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர்கள் கி. மனோகரன், டி. வி. நாராயணசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

காலை 10 மணிக்கு ஊர்வலம் உண்டு.

கழகக் கூட்டங்கள்

★

குத்தாலம்:
நகரப் பூங்காவில்
25—10—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: என். கிட்டப்பா
பேசுபவர்: கி. மனோகரன்

★

நிலவெளி:
கடைவீதியில்
26—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: முருகையன்
பேசுவோர்:
கி. மனோகரன்
என். கிட்டப்பா
சி. ஜம்பு

சென்னை-மயிலையில் நபிகள் நாயகம் விழா

அண்ணு கலந்து கொள்கிறார்

26—10—57 மாலை 6-மணிக்கு அப்துல்மஜீத் படிப்பகச் சார்பில், மயிலை பாட்சா தோட்டத்தில் (மார்க்கெட் பின்புறம்) மேற்படி விழா நடைபெறும்; தோழர் எம். எஸ். கமால்பாட்சா தலைமை வகிப்பார்; அண்ணு அவர்களும், தோழர்கள் எம். எஸ். அப்துல் காதர், பி. இராமசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்; சேலம்-சீனிவாசன் இன்னிசை வழங்குவார்.

தங்கச்சிமடத்தில்

பி. எஸ். செல்வா—கலைத்தூதன் குழுவினர் நாடகம்

26—10—57 இரவு 11மணிக்கு தங்கச்சிமடம் தி. மு. கழகக் கிளையின் நிதிக்காக, மதுரை பி. எஸ். செல்வா—கலைத்தூதன் குழுவினர் நடிக்கும் 'தவறியவள்?' என்னும் நாடகம் நடைபெறும்.

சென்னை—18-வது வட்ட தி. மு. க. செயற்குழுவினருக்கு:

26—10—57 இரவு 7 மணிக்கு மேற்படி வட்ட தி. மு. க. கிளையின் அவசர செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

குத்தாலத்தில் என். எஸ். கே. படிப்பகம் திறப்பு

25—10—57 மாலை 5 மணிக்கு குத்தாலம் கடைவீதியில் தோழர் இராமலிங்கம் தலைமையில் தோழர் கி. மனோகரன் என். எஸ். கே. படிப்பகத்தைத் திறந்து வைப்பார். தோழர் என். கிட்டப்பா, என். எஸ். கே. படத்தைத் திறந்துவைப்பார்.

அரக்கோணம் பொதுநல மன்றச் சிறப்புக் கூட்டம்

26—10—57 மாலை 6 மணிக்கு அரக்கோணம், குமரன் நகர் காந்தி பூங்கா அருகில் தோழர் பி. கோவிந்தராசலு தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் தோழர்கள் க. அன்பழகன் எம்.எல்.ஏ., ஆர். ஜார்ஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஆச்சாரியார் அறைகூவல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மற்றும் இதர இடங்களில் இந்தியாவுக்கு எதிராக அவை சதியில் ஈடுபடுவதாகக் கடுங் குற்றச்சாட்டுகள் எழும்பியுள்ளன. அப்படிப்பட்ட நாடுகளைக்கொண்ட காமன்வெல்தில் நாம் உறுப்பினராயிருக்கும்போது, பிறர் நம்மீது திணிக்காத நிலையில் ஆங்கிலத்தை நாம் வைத்துக்கொள்வதற்குத் தடை என்ன?

"காமன்வெல்த் உறவு வேண்டாம் என்று முடிவு செய்துவிடுவார்களேயானுல், அப்போது நான், இந்தி கூடாது—ஆங்கிலம்தான் வேண்டும் என்பதற்கும் புதிதாக வாதங்களைச் சொல்லுவேன்—காமன்வெல்த் உறவைவிட்டு விட்டால், நான் ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லுவதாக ஆகிவிடாது; ஆனால் அதற்கிடையில், காமன்வெல்த் உறவை வைத்துக் கொண்டிருக்கையில், ஆங்கிலத்தை வைத்துக் கொள்வது இந்தியாவின் கௌரவத்திற்கு இழுக்கு என்ற வாதம் என்னைத் திருப்திப்படுத்த முடியாது.

"பிரிட்டிஷ் அரசரையோ, அரசியையோ காமன்வெல்த்தின் தலைவரான ஏற்றுக்கொண்டிருப்பதில் இல்லாத மானக்கேடு, ஆங்கிலத்தை வைத்துக்கொள்வதில் வந்துவிடுமா?

உறுதிமொழிகள் எங்கே?

"இந்தியை எவர் மீதும் திணிக்கமாட்டோம் என்று குடியரசுத் தலைவரும் பண்டிதரும் உறுதிமொழி தருகின்றனர்; இதுவே, இந்தியைத் திணிப்பதால், ஏற்படக்கூடிய தீங்குகளையும், கஷ்டங்களையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டும். ஆனால் உண்மையில், நடைமுறையில் அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?

"விற்கப்படுகிற தபால் கார்டுகளிலும், வழங்கப்படுகிற மணியார்டர் நமூனக்களிலும் எல்லாம் இந்தி! அந்த வகையில் சந்தடியின்றி இந்தி புகுத்தப்படுகிறது — நமக்குப் பயிற்சி தருவதற்கு என்ற சாக்கில்! இன்னும் இது போலப் பலவழிகளிலும் இந்தி திணிக்கப்படும் என நான் அஞ்சுகிறேன். இதுபோன்ற நிலைமைகள் இருக்கும்போது, வாயளவில் இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று கூறுவதில் பயன் இல்லை.

"நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். எச்சரிக்கையோடு இருந்தாக வேண்டும்.

தேசிய மொழி இந்தி மட்டுமா?

"இந்தி மட்டும் இந்தியாவின் ஒரே தேசிய மொழி அல்ல!

"'இந்தியா ஒரே தேசமாவதற்கு ஒரு தேசிய மொழி அவசியமல்லவா?' என்று சிலர் கேட்கின்றனர்.

"நமது சுதந்தரக் கோரிக்கையை வெள்ளையர் எதிர்த்த போது, நாம் சொன்னதென்ன?

"நாம் பல மொழிகள் பேசினாலும், பல மதங்களைப் பின்பற்றினாலும், நம்மையே நாம் ஆண்டுகொள்ள முடியும் என்றுதானே கூறினோம்? இன்றும் நாம் சொல்லுகிறோம்—நாம் ஒரே மக்களாக—ஒரே சுதந்தர நாடாக வாழ முடியும் என்று! எனவே, இப்போது ஒரு மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்குவதற்கு முற்படுவதில் பயனில்லை.

"நமது முயற்சிகளுக்கு அடிப்படையாக கற்பனைகளையும், சுய விருப்பச் சிந்தனைகளையும், உண்மைக்குப் புறம்பானவற்றையும் கொள்வோமேயானால், அதனால் வெற்றிபெறவே முடியாது.

"இந்திதான் ஒரே தேசிய மொழி என்ற சந்தேகமில்லாத சுய விருப்பச் சிந்தனை, தவறான முடிவுகளுக்குத்தான் வழிகாட்டும்.

ஒத்திவைப்பு ஏன்?

"பிரச்சினையை இன்றே சந்தித்து ஒரு முடிவு காணுவதை விட்டுவிட்டு, 'இந்தி இன்றைக்கு வேண்டாம்; பிறிதோர் நாள் ஏற்றுக்கொள்ளலாம்' என எதிர்காலத் தேதி நிர்ணயம் செய்வது முறையானது அல்ல; ஏனெனில், அந்தத் தேதி நெருங்கும்போது, நாம் சந்திக்க வேண்டியிருக்கும் கஷ்டங்கள் பின்னும் அதிகமாகும். கஷ்டங்களுக்கும் அப்பால், அந்த ஏற்பாட்டில் நீதியும் இல்லை. ஏனெனில், நாம் நமது சவுகரியத்தைமட்டும் கவனித்துக் கொண்டோம் என்ற குற்றத்திற்கு, அந்தத் தியாகத்தை எதிர்காலச் சந்ததிக்கு விட்டுவிட்ட குற்றத்திற்கு ஆளாவோம்.

எச்சரிக்கிறேன்

"இந்தி இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக்கப்படுவது, இந்தி பேசாத மக்களுக்கு நிரந்தரமான பிரதிகூலம் செய்வதாகும் என இந்தி வெறியர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எச்சரிக்கை தர விரும்புகிறேன்."

நல்ல கருத்தை உருவாக்கியுள்ளாராம்!

ஆனால் நீடிக்குமா என்பதில் பிர்லா சந்தேகம்?

லண்டன், அக். 24—

"அமெரிக்காவில் இந்தியாவைப் பற்றி டி. டி. கிருஷ்ணமாச்சாரி நல்ல கருத்தை உருவாக்கி உள்ளார்; அந்த நல்ல கருத்து நீடிப்பதும் நீடிக்காததும், இந்தியாவில் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கும்" என்று, வடநாட்டுத் தொழில் அதிபர் பிர்லா கூறியுள்ளார்.

ஆசிரியர்கள் ஊதியம்

ஒரே அளவில் இருக்கும்

திருவனந்தபுரம், அக். 24—

10 ஆண்டுகளுக்குள் எல்லாத் துறை ஆசிரியர்களின் ஊதிய அளவையும் ஒன்றுபடுத்தும் செயலில் கேரளம் ஈடுபட்டுள்ளது.

'லோயர்' 'ஹையர்' கிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 40—80 விகிதத்தில் ஊதியம் தரப்படும் என்று தெரியவருகிறது.

ரஷ்யாவைப் பார்!

பிரிட்டிஷ் பிரதமர் விளக்கம்

லண்டன், அக். 24—

உலகப் போருக்குப் பிறகு 10 கோடி மக்கள் தொகையுள்ள பகுதியை, அங்குள்ள மக்கள் விருப்பத்திற்கு மாறாக கம்யூனிஸ்டு ரஷ்யா இணைத்துக் கொண்டுள்ளது.

ஆனால் பிரிட்டன், ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள 50 கோடி மக்களுக்குச் சுதந்தரம் கொடுத்துள்ளது.

இந்தத் தகவலை பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

12—10—57-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஏற்ற இறக்கமின்றி 370-லேயே நின்றது.

ரஷ்யாவின் முன்னேற்பாடு!

லண்டன், அக். 24—

துருக்கி எல்லையிலுள்ள சோவியத் பகுதியில் இராணுவத் தலைவர் பதவியை, உதவி யுத்த அமைச்சர் ரோக்கோஸாவஸ்கி ஏற்றுள்ளார்.

இவர் ஏழு ஆண்டுக்காலம், போலந்தின் போர் அமைச்சராக இருந்துள்ளார்.

பீடித் தொழிலாளருக்குக் கூலி நிர்ணயம்

திருவனந்தபுரம், அக். 24—

சென்னை, கேரளம், மைசூர், ஆகிய மூன்று மாநிலங்களிலும், பீடித் தொழிலாளருக்கு ஒரே மாதிரியான கூலி நிர்ணயம் செய்வது சம்பந்தமாக இந்த மாநிலங்களின் தொழில் அமைச்சர்கள் கலந்து பேசுவதாகத் தெரியவருகிறது.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் 3 ஆண்டு பட்டப்படிப்பு

வருமானம் குறையுமாம்

அண்ணமலைநகர், அக். 24—

பல்கலைக்கழகப் பூர்வாங்க படிப்பையும், 3 வருட பட்டப்படிப்பையும் 1960—71-ம் ஆண்டு முதல் அமுல் நடத்துவதன் காரணமாக ரூ. 1,50,000 வருமானம் குறையும் என்று அண்ணுமலைப் பல்கலைக் கழக 'சிண்டிகேட்' மதிப்பிட்டுள்ளது.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க நடவடிக்கை

சென்னை, அக். 23—

கள்ளத்தனமாக இலங்கைக்கு குடியேறுவதைத் தடுக்க செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 30 இடங்களில் போலீசார் சோதனையிட்டனர். கள்ளத்தனமாகக் குடியேற இருந்த 49 நபர்களும், 14 தரகர்களும், 7 படகோட்டிகளும் பிடிபட்டனர்.

கள்ளத்தனமாகக் குடியேறினவர்கள் என்று அறிவிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் திருப்பி அனுப்பப்பட்ட 355 பேர் தனுஷ்கோடி வந்து சேர்ந்தனர்; அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின்மீது 9 கள்ளக் குடியேற்ற நபர்கள், 14 தரகர்கள், 7 படகோட்டிகள் பிடிபட்டனர்.

நகரசபைக்கு சென்னை அரசாங்கத்தின் உதவி

சென்னை, அக். 23—

திருவொற்றியூர் நெடுஞ்சாலையில், வண்ணையம்பதி புகைவண்டி நிலையத்தின் அருகே ஒரு பாலம் அமைக்கவும், நிலத்திற்குக் கீழ் ஸ்பிரிங்ஹேவன் ரோடில் ஒரு பாலம் அமைக்கவும் சென்னை மாநில அரசாங்கம், முறையே ரூ. 1 இலட்சம்; ரூ. 50,000 சென்னை நகர சபைக்கு அளித்துள்ளது. இந்தத் தொகையில் 50 சத விகிதம் கடனாகத் தரப்பட்டுள்ளதாகும்.

பல்கலைக் கழகங்களில் தமிழ் போதனு மொழி

சென்னை, அக். 24—

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பூர்வாங்கப் படிப்பை தமிழில் கற்பிக்க வேண்டும் என்பது பற்றியும் பாடப் புத்தகங்கள் தமிழாக்கப்படுவது பற்றியும் சென்னைப் பல்கலைக் கழக 'செனட்' விவாதித்து முடிவு செய்யும் என்று தெரியவருகிறது.

சென்னை, அக். 24—

1950-ம் ஆண்டு சென்னை கிராமப் பஞ்சாயத்துகள் சட்டத்திற்கு அரசாங்கம் ஒரு திருத்த மசோதா வெளியிட்டுள்ளனர்.

பஞ்சாயத்து உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

★

27—10—57 பிற்பகல் 3-மணிக்கு தேவகோட்டை வடக்குச் சிலம்பனி 76 என்னுள்ள தோழர் இராம-வெள்ளையன் அவர்கள் இல்லத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

அவ்வமயம் ஆய்வுக்கு வருபவை:-

1. நம் மாவட்டத்தை இரு பகுதிகளாகப் பிரித்து இரு ஆணைச்செயலாளர்களை தேர்ந்தெடுத்து செயல்படச் செய்வது;
2. மாவட்ட மாநாடு நடத்துவது குறித்து மறுபரிசீலனை செய்தல்.

கிளைக் கழகச் செயலாளர்களும் மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாமல் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவேண்டுமாய், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இ. லெ. ம. சௌந்திரபாண்டியன் கேட்டுக் கொள்கிறார்.

செம்பியம் பொதுநல மன்றம் 2- ஆண்டு விழா

26—10—57 மாலை 5½ மணிக்கு பெரம்பூர்-மாதவரம் நெடுஞ்சாலை, குப்ரா பஜார் அருகில், தோழர் டி. லோகநாதன் தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., தோழர்கள் வ. வீராசாமி, எஸ். பக்கிரிசாமி எம்.எல்.ஏ., எம். சுந்தரராஜ், டி. ஆண்டியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணு

சுற்றுப்பயணம்

அக்.
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்
நவ.
1 : கூடுவாஞ்சேரி

க. அன்பழகன்

நிகழ்ச்சிகள்

★

அக்டோபர்
25 : மாலை—கெல்லிஸ் (சென்னை)
26 : மாலை—அரக்கோணம்
27 : காலை—சென்னை
மாலை—இராணிப்பேட்டை (தொழிலாளர் மாநாடு)
29 : மாலை—புரசைவாக்கம் (கழக ஆண்டுவிழா)
நவம்பர்
3 : சென்னை திருமணம்
8 : கோமளீஸ்வரன்பேட்டை
10 : காலை—பழனி
மாலை—திண்டுக்கல்

இந்தியாவில்

வேலையற்றோர் எண்ணிக்கை

புதுடில்லி, அக். 23—

இந்தியாவில் 53 இலட்சம் பேர்கள் வேலையில்லாமல் திண்டாடுவதாகத் தெரிய வருகிறது என்று புதுடில்லி செய்தியொன்று கூறுகிறது.

நிதி அமைச்சரின் மதிப்பீட்டைப் பார்க்கும்போது நாட்டில் ஒரு கோடி மக்களுக்கு அதிகமாக முழுநேர வேலையில்லாதோர் உள்ளனராம். இதற்குக் காரணம், மக்கள், கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வந்துவிட்டதுதானும்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.